



தமிழ்நாடு அரசு

# வேளாண்மைப் பொறியியல் துறை

## வேளாண்மைப் பொறியியல் துறையும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகமும் இணைந்து நடத்தும் திறன் மேம்பாட்டு பயிற்சி

வேலைவாய்ப்பற்ற கிராமப்புற இளைஞர்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்தவும், வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் தங்கள் விளை நிலங்களிலேயே பழுது நீக்கி பராமரித்திடவும், வேளாண்மைப் பொறியியல் துறையும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமும் இணைந்து வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள கோயம்புத்தூர், வேலூர், திருவாரூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி இயந்திரப் பணிமனைகளில் வேலைவாய்ப்பற்ற கிராமப்புற இளைஞர்களுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் சூரிய சக்தி பம்புசெட்டுகள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் குறித்த பயிற்சியினை அளித்து வருகிறது.






**பயிற்சி வகுப்புகள்**

இத்திட்டத்தில் பயிற்சி பெற்ற கிராமப்புற இளைஞர்கள் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டமான "வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் சூரிய சக்தியால் இயங்கும் பம்புசெட்டுகள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிக்கும் மையங்கள்" அமைக்க மானியம் பெறவும் தகுதி பெறுவர். இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற இளைஞர்கள் தங்கள் கிராமங்களில் அவ்வப்போது பழுதாகும் வேளாண் இயந்திரங்களை அவை பழுதடைந்து நிற்கும் விளை நிலங்களிலேயே பழுது பார்த்து கொடுப்பதன் மூலம் அவர்கள் வருமானம் ஈட்டுவதோடு, விவசாயிகளுக்கும் பழுது நீக்குவதற்கான நேரமும், பணச் செலவும் குறைகிறது.

இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 1,350 கிராமப்புற இளைஞர்கள் பயன் பெறுவர்.

**தகுதி வரம்பு**

பத்தாம் வகுப்பு அல்லது தொழில்முறை பயிற்சி (ITI)யில் தேர்ச்சி பெற்ற 18 வயது முதல் 45 வயது வரை உள்ள இளைஞர்கள் இப்பயிற்சியில் இணைந்து பயன்பெறலாம்.

**பயிற்சி விவரம்**

1. ஒவ்வொரு பயிற்சியும் மொத்தம் 15 நாட்கள் நடைபெறும்.
2. ஒவ்வொரு பயிற்சியிலும் மொத்தம் 20 கிராமப்புற இளைஞர்கள் பயிற்றுவிக்கப்படுவர்.
3. பயிற்சி பெறும் கிராமப்புற இளைஞர்கள் பயிற்சிக்கு வந்து செல்வதற்கான போக்குவரத்து செலவின தொகை வழங்கப்படும்.
4. பயிற்சியின் முடிவில் தேர்ச்சி பெற்ற கிராமப்புற இளைஞர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.
5. மேலும் பயனாளிகள் வேளாண் இயந்திரங்கள் உற்பத்தி நிறுவனத்தில் வேலையில் சேரவோ அல்லது சுயதொழில் தொடங்கவோ தகுந்த வழிகாட்டுதல்கள் வழங்கப்படும்.

எனவே, இப்பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் கிராமப்புற இளைஞர்கள் கோயம்புத்தூர், வேலூர், திருவாரூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலியிலுள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் பணிமனைகளிலோ அல்லது அருகிலுள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவி செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகங்களிலோ தங்கள் விண்ணப்பத்தினை அளித்து பயன் பெறவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை பற்றி அறிந்துகொள்ள மற்றும் விண்ணப்பிக்க கீழ்க்கண்ட இணைய தளத்தில் பதிவு செய்திடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

https://aed.tn.gov.in

**மேலும் தொடர்புக்கு**

| | |
|---|---|
| தலைமைப் பொறியாளர் (வே.பொ).<br>வேளாண்மைப் பொறியியல் துறை,<br>எண். 487, அண்ணாசாலை, நந்தனம்,<br>சென்னை – 600 035.<br>தொலைபேசி எண்: 044-29510822<br>இமெயில்– aedcewrm@gmail.com, | சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர் (வே. பொ) மற்றும் உதவி செயற்பொறியாளர் (வே. பொ) |